


குடியரசு தினம்



நேதாஜி பிறந்த நாள்



செவ்வாயில் குடியேறலாம்



சாலைப் பாதுகாப்பு வாரம்


KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power

சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையுடன்
திருச்செங்கோடு, கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையில்
தொல்காப்பியம் கற்பித்தல் உத்திகள் என்னும் தலைப்பில்
20 வல்லுநர்கள் பங்கேற்று 40 அமர்வுகளில்
பத்துநாள் பயிலரங்கம்
21.01.2013 முதல் 30.01.2013 வரை நடைபெற உள்ளது.


தனிச்சுற்றுக்கு மட்டும்


Vidiyal - 45 Jan 2013

சன் பிரிண்டர் - தி.கோடு, செல்: 97500 20222


# விடியல்

## The Dawn மாத இதழ்


பொழுது - 45
சனவரி 2013





II-B.Sc (CS) 'C'



# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 45*
*சனவரி, 2013*
பக்கங்கள் - 32, தனிச்சுற்றுக்கு மட்டும்



*சிறப்பாசிரியர்*
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்



*வெளியீடு:*

**தமிழ்த்துறை**

கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215,
தமிழ்நாடு, இந்தியா.
fb: facebook.com/ksrcasthamizh.vidiyal
Blog: ksrcasthamizh.blogspot.in
Email : vidiyalmagazhine@gmail.com
Website: ksrcas.edu



© **K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)**

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.


## உள்ளடக்கம்


***துளிச்செய்திகள்***

*கொஞ்சும் மொழி 02, அதிவேகம் 28,*
*கருத்துகள் 08, 26, 32*

***கட்டுரைகள்***

*நேதாஜி 03, புதிய வாழிடம் 09,*
*தைமாதம் 20, மணிமேகலை 23,*
Cyanide 29

***கவிதைகள்***

*புத்தாண்டு,புதுவருடம் 02,*
*புத்தாண்டு 19, 22, வருடப்பிறப்பு 26,*
*தமிழர் பொங்கல் 08, முயற்சி 10,*
*முப்பொங்கல் 08,பொங்கல் வாழ்த்து 09,*
*தைத்திருநாள், புதுமையின் ஆண்டு 09,*
*நட்பு 21, 25, காற்று 22,*
*நினைவுகள் 23, நேசம் 26, நிழல் 29*

***அறிவிப்பு***

*பயிலரங்கம் 27*

***கதை***

*உலகம் நல்லதா? கெட்டதா? 18*

***சங்கச் சாரல் - 11***

*பெண்ணின் பெருமை*
*தரும் தாய்மை 14*

***இசை நினைவுகள் - 03***

*எம். கே. டி. 10*

***உள் அட்டை ஓவியங்கள்***

*அ. ராமபிரியா II nd* **B.Sc. CS ‘C’**

## குறிப்பு

*இந்த மாதம் விழாக்களின் மாதம். ஆங்கிலப் புத்தாண்டு, போகிப் பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல், ஏறுதழுவுதல், காணும் பொங்கல், திருவள்ளுவர் தினம், குடியரசுதினம், நேதாஜி பிறந்த தினம், சுவாமி விவேகானந்தர் பிறந்த தினம் எனப் பல கொண்டாட்டங்கள் நமக்காகக் காத்திருக் கின்றன. அவற்றைக் கொண்டாடும் வகையில் இந்த இதழில் பல தகவல்கள் இடம்பெற்றுள்ளன. தைத்திருநாள் தமிழரின் திருநாள். அனைவருக்கும் 'தைத்திருநாள்' வாழ்த்துகள்!*

## கொஞ்சும் மொழி

குழந்தைகளை நாம் கண்ணே, மணியே, கட்டிக்கரும்பே என்று கொஞ்சுவது வழக்கம். ஆனால், பிற நாட்டில் வேறு விதமாகக் கொஞ்சுகின்றனர். போலந்து நாட்டில் 'பிஸ்கட்டே' என்றும் அரேபியா நாட்டில் 'வெள்ளரிப் பிஞ்சே' என்றும் திபெத் நாட்டில் 'சின்னஞ்சிறு பன்றியே' என்றும் ஃபின்லாந்து நாட்டில் 'இளந்தளிரே' என்றும் குழந்தைகளைக் கொஞ்சுவர்.

எஸ். ராஜேஸ்வரி
***இளங்கலை வேதியியல் முதலாண்டு.***

## புத்தாண்டு

***பல திருநாட்கள் கழிய***
***இத்திருநாள்,***
***புதிய அத்யாயத்தை***
***நிகழ்த்த இருக்கும்***
***இளைஞருடன் ஒளிரட்டும்.***
***பனிப்பூக்களின்***
***தன்மை கொண்ட நமது***
***பண்பாட்டைப்***
***பாரெங்கும் மணம் வீச***
***இப்புத்தாண்டுப் பூச்செண்டு***
***மலரட்டும் -***
***நாளைய சமுதாயம் ஒளிர***
***வாழ்த்தட்டும்"***

த. பிரியா
***இளங்கலை கணினி அறிவியல்***
*முதலாண்டு 'அ' பிரிவு*

## புதுவருடம்

***"சூரியன் கதிர் பரப்ப,***
***தாமரை இதழ் விரிக்க,***
***இசைஞர்கள் இன்னிசைக்கப்***
***புது மணப்பெண்போலப்***
***பவனிவா புத்தாண்டே!"***

யு. சக்திவேல்
***இளங்கலை கணினி அறிவியல்***
*முதலாண்டு 'அ' பிரிவு*

# நேதாஜி

இந்தியாவில் ஒரிசா (இன்றைய ஒடிசா) மாநிலத்தில் கட்டாக் எனும் இடத்தில் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் நாள் வங்காள இந்து குடும்பத்தில் சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தார். இவர் தந்தையின் குடும்பம், 27 தலைமுறையாக வங்க மன்னர் களின் படைத்தலைவர்களாகவும் நிதி மற்றும் போர் அமைச்சர்களாகவும் பணியாற்றி வந்த பெருமைமிக்க மரபுவழியை உடையது. இவரது தாயார் பிரபாவதிதேவி 'தத்' எனும் பிரபுக் குலத்திலிருந்து வந்தவர். எட்டு ஆண் பிள்ளைகளையும் ஆறு பெண் பிள்ளைகளையும் கொண்ட இக்குடும்பத்தில் ஒன்பதாவது பிள்ளையாகச் சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தார்.

ஐந்து வயதான போது, கட்டாக்கிலுள்ள பாப்டிஸ்ட் மிஷன் ஆரம்பப் பள்ளியில் இணைந்த சுபாஷ் ஏழு ஆண்டுகள் அங்குக் கல்வி பயின்றார். பின்னர் தன் உயர் கல்வியைக் கொல்கத்தா ரேவன்ஷா கல்லூரியில் தொடங்கி, 1913 ஆம் ஆண்டுத் தேர்வில் கொல்கத்தா பல்கலைக் கழக எல்லைக்குள் இரண்டாம் மாணவராகத் தேறினார். இவரது தாயார் தெய்வ பக்தி மிக்கவர். அதனால், சுபாஷும் சிறு வயது முதலே விவேகானந்தர் போன்ற ஆன்மிக பெரியார்களின் பால் ஈடுபாடுடைய வராயும் அவர்களின் அறிவுரைகளைப் படித்து வருபவராயும் இருந்தார். இதனால், ஞான மார்க்கத்தின் பால் ஈடுபாடு கொண்டார். துறவறத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பினார். எதிலுமே பற்றற்று இருந்ததுடன் தன் 16 ஆவது வயதில் வீட்டை விட்டு வெளியேறி, ஞானவழிக்கான ஆசானைத் தேடி இரண்டு மாதங்கள் அலைந்தார். தன் மானசீக ஆசானாக விவேகானந்தரையே ஏற்று வீடு திரும்பினார்.

துறவறப் பாதையில் செல்ல விரும்பிய சுபாஷ் சந்திரபோஸ் ஞான மார்க்கத்திற்கு ஏற்ற குரு கிடைக்காததால் தந்தையாரின் விருப்பிற்கு இணங்கி, 1915 ஆம் ஆண்டு கொல்கத்தா பிரசிடென்சி கல்லூரியில் சேர்ந்தார். அக் காலத்தில் ஆங்கில இனவெறி மிக்க வரலாற்று ஆசிரியரான சி. எப். ஓட்டன் என்ற ஆசிரியர் அங்குக் கற்பித்தார். அவர் கல்வி கற்பிக்கும் நேரங்களில் பெரும் பாலும் இந்தியர்களை அவமதித்து வந்தார். இவருடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக சுபாஷ்

சந்திர போஸும் அவரது நண்பர்களும் கல்லூரியை விட்டு நீக்கப்பட்டதுடன் இரண்டு ஆண்டுகள் வேறெந்த கல்லூரிகளிலும் படிப்பைத் தொடர முடியாது செய்யப்பட்டனர். இதனால் தன் கல்வியைத் தொடர முடியாதிருந்த சுபாஷ், சி. ஆர். தாஸ் என்று அறியப்பட்ட சித்தரஞ்சன் தாஸ் மற்றும் சிலரின் உதவியுடன் 1917 ஆம் ஆண்டு ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு 1919 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேறியதுடன் மாணவர் களுக்குரிய படைப் பயிற்சியிலும் சிறப்பாகத் தேறினார்.

அக்காலத்தில் நாட்டுச் சூழ்நிலைப் பற்றி அவ்வப்போது வீட்டில் விவாதங்களில் ஈடுபட்ட சுபாஷ்யைப் பார்த்த அவரது தந்தையார் இவரை அரசியலில் ஈடுபடுத்த விரும்பாது லண்டனுக்கு ஐ.சி.எஸ் தேர்வுக்குப் படிக்க அனுப்பி வைத்தார். தன் படிப்பைத் தொடர்ந்த போஸ், லண்டனில் நடந்த 1920 இல் இந்திய மக்கள் சேவை படிப்புக்கான (இந்தியக் குடிமைப் பணி எனப்படும் ஐ.சி.எஸ். தேர்வு) நுழைவுத்தேர்வில் பங்கேற்று இந்தியாவிலேயே நான்காவதாகத் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆனால் தன் நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் ஆங்கிலேயரிடம் வேலை செய்யக் கூடாது எனக் கருதி, தான் முயற்சியுடன் படித்துப் பெற்ற தன் பதவியை லண்டனிலேயே பணித்துறப்பு செய்தார்.

வழக்குரைஞரான சி. ஆர். தாஸ் தன் தொழிலை விட்டுவிட்டு ஒத்துழையாமை இயக்கத்திற்குத் தலைமை தாங்கி தேசப் பணியாற்றிக் கொண்டிருந்தார். சுபாஷ் கடிதம் மூலம் சி.ஆர்.தாசிடம் தான் தாய் நாடு திரும்பியதும் இந்திய சுதந்திரப் போரில் பங்கேற்க ஆலோசனை கேட்டிருந்தார். அதை ஏற்று சுபாஷ் சந்திர போஸ் வருவதாயிருந்தால் தான் ஏற்று கொள்வதாகவும் பதவி துறந்ததைப் பாராட்டியும் சி. ஆர். தாஸும் மறுகடிதம் அனுப்பினார்.

இக்காலகட்டத்தில் தான் தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியிருந்த காந்தியும் இந்திய அரசியலில் ஈடுபட்டார். இந்திய மக்களும் காங்கிரசின் தலைமையின் கீழ் சுதந்திர எழுச்சி பெற்றிருந்தனர். 1921 ஆம் ஆண்டு மும்பை துறைமுகத்தில் வந்திறங்கிய சுபாஷ் சந்திரபோஸ் மும்பையில் அப்போது தங்கியிருந்த காந்தியையும் சந்தித்து ஒரு மணிநேரம்

கலந்தாலோசித்தார். போஸ் சித்த ரஞ்சன்தாஸின் கீழ் தொண் டாற்றவே விரும்பினார். போசை ஏற்று கொண்ட சி.ஆர்.தாஸும் அவரின் திறமையை நன்கு அறிந்திருந்ததுடன் திறமை மிக்க அவரது குடும்ப பின்ன ணியையும் அறிந்திருந்தார். இதனால் சி.ஆர். தாஸ் தான் நிறுவிய 'தேசியக் கல்லூரியின்' தலைவராக 25 வயதே நிரம்பிய போஸை நியமித்திருந்தார். லண்டனில் கேம்பிரிட்ஜில் படிக்கும் போது மேல்நாட்டு விடுதலைப் போர் வரலாறுகளையும் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சி களையும் நன்கு அறிந்து கற்றிருந்த சந்திரபோஸ் தன் கல்லூரியில் மாணவர்களுக்கு விடுதலை உணர்ச்சி பொங்கும் வண்ணம் சொற்பொழிவு ஆற்றியதுடன் பாடமும் கற்பித்தார்.

13 பிப்ரவரி 1933இல் உடல் நிலை சரியில்லை என வியன்னா சென்றவர் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளான செக்கோசிலோவாக்கியா, போலந்து, ஹங்கேரி, இத்தாலி, ஜெர்மனி என பயணம் மேற்கொண்டு அந்த நாடுகளில் இருந்த இந்திய இளைஞர்களைச் சந்தித்து நாட்டின் விடுதலையை பற்றி பேசி ஒத்துழைப்பு கேட்டார். ஐரோப்பாவின் அரசியல் வாதிகளையும், ஆட்சியாளர்களையும் சந்தித்து விடுதலைக்கு உதவும்படி கேட்டார். 1935இல் முசோலினியை சந்தித்து ஆதரவு கேட்டார். பயணத்தில் ஆஸ்திரியாவை சேர்ந்த எமிலியின் அறிமுகம் கிடைத்தது. அவரைத் தன் உதவியாளராக்கிக் கொண்டார். உடல் நலம் தேறியது. அதற்கு எமிலியும் ஒரு காரணம். இருவருக் குள்ளும் காதல் அரும்பியது. 1937 டிசம்பர் 27இல் எமிலியைப் போஸ் ரகசியமாகத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 1942இல் அனிதா போஸ் என்ற ஒரு மகள் பிறந்தார்.

இரண்டாவது உலகப்போர் மூண்டதும், இந்திய மக்களின் ஒத்துழைப்பைப் பிரித்தானிய அரசு கோரியது. ஆனால், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டுவதில் ஈடுபட்டார். இதன் காரணமாக 1940 ஜுலையில் நேதாஜியை அரசாங்கம் கைது செய்து சிறையில் அடைத்தது. நேதாஜி 1940 நவம்பரில், சிறையில் உண்ணாவிரதம் தொடங்கினார். சுபாஷ் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால், பெரும் விளைவுகள் ஏற்படும் என்பதைப் பிரித்தானிய அரசு அறிந்திருந்தது. எனவே, உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி அவரிடம் அதிகாரிகள்

கெஞ்சினார்கள். ஆனால், சுபாஷ் இணங்கவில்லை. உண்ணாவிரதம் தொடங்கி ஒரு வாரம் ஆயிற்று. நேதாஜியின் உடல் நிலை மோசம் அடைந்தது. வேறு வழியின்றி நேதாஜியை அரசாங்கம் விடுதலை செய்தது. ஆனால் அவர் வீட்டைச்சுற்றி இரகசியக் காவலர்கள் சாதாரண உடையில் 24 மணி நேரமும் கண்காணித்தபடி இருந்தனர். எப்படியும் இந்தியாவிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று நேதாஜி தீர்மானித்தார். வெளிநாடு செல்ல உதவுவதாக, அவருடைய நண்பர்கள் சிலர் வாக்களித்தனர்.

1941ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் நாள் நேதாஜி முஸ்லிம் போல் தாடி வைத்துக்கொண்டு, மாறு வேடத்தில் காரில் தப்பிச்சென்றார். கொல்கத்தா விலிருந்து தொடர்வண்டியில் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்தார். பெசாவர் நகரை (தற்போது இது பாகிஸ்தானில் உள்ளது) அடைந்து இந்தியாவின் எல்லையைக் கடந்தனர். பின்னர் ஆப்கானிஸ்தான் சென்றார். அங்கு இத்தாலி நாட்டு தூதரக அதிகாரிகளுடன் நேதாஜி தொடர்பு கொண்டு இத்தாலிக்குச் செல்ல அனுமதி வாங்கினார். ருஷ்யா வழியாக இத்தாலிக்குச் செல்ல வேண்டும் என்பது நேதாஜியின் திட்டம். ஆனால், எதிர்பாராதவிதமாக ஜெர்மனிக்கு வருமாறு ஹிட்லரிடமிருந்து அழைப்பு வந்தது. அதை ஏற்ற நேதாஜி, தொடர்வண்டி மூலம் மாஸ்கோ சென்று அங்கிருந்து ஜெர்மன் தலைநகரான பெர்லினுக்குப் போய்ச்சேர்ந்தார். அவர் ஜெர்மனி வந்து சேர்ந்த செய்தியை மார்ச் 28ஆம் நாள் ஜெர்மனி பத்திரிகைகள் வெளியிட்டன. அப்போது தான், அவர் இந்தியாவில் இருந்து மாறுவேடத்தில் தப்பிச் சென்ற விஷயமே பிரித்தானிய அரசுக்குத் தெரிந்தது. ஜெர்மனியில் நேதாஜிக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஹிட்லரை நேதாஜி சந்தித்துப்பேசினார். இந்தியாவின் விடுதலைக்கு முழு ஆதரவு தருவதாக ஹிட்லர் உறுதி அளித்தார்.

1941இல் ‘சுதந்திர இந்திய மையம்’ என்ற அமைப்பை தொடங்கி ஆசாத்ஹிந்த் என்ற ரேடியோவையும் உருவாக்கிச் சுதந்திர தாகத்தை அங்கிருந்த இந்திய மக்களிடம் விதைத்தார். நாட்டுக்கு எனத் தனிக் கொடியை உருவாக்கி ‘ஜனகனமன’ பாடலைத் தேசிய கீதமாக அறிவித்தார்.

ஜெர்மனி, இத்தாலியின் உதவி கிடைக்காது என தெரிந்தபின் ஜப்பான் செல்ல முடிவு செய்து, போர் காலத்தில் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் ஜப்பான் சென்று ராணுவ ஜெனரல் டோஜோவைச் சந்தித்து உதவி கேட்டார். உதவிகள் தயாராயின. பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக ராஷ் பிஹாரி போஸால் உருவாக்கப்பட்டு செயல்படாமல் இருந்த ‘இந்திய தேசிய ராணுவ’த்தை மீள் உருவாக்கம் செய்து அதன் தலைவரானார் சுபாஷ். சுதந்திரத்திற்குப் போராடி நாட்டிற்காக உயிர் தர இளைஞர்கள் வேண்டுமென ஆட்களைத் திரட்டி, பயிற்சி அளிக்கப்பட்டது.

1943 அக்டோபர் 21இல் சிங்கப்பூரில் நடந்த மாநாட்டில் போஸ், சுதந்திர அரசு பிரகடனத்தை வெளியிட்டார். டிசம்பர் 29ஆம்நாள் அரசின் தலைவராகத் தேசியக் கொடியை ஏற்றினார். அவற்றை ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி, சீனா உட்பட ஒன்பது நாடுகள் ஆதரித்தன. பர்மாவில் இருந்தபடி தேசிய படையை இந்தியாவை நோக்கி நகர்த்தினார். ஆனால், பிரித்தானியப் படைகள் முன் தாக்கு பிடிக்க முடியாமல் இப்படை தவித்தது. மனம் தளராமல் இந்தியாவின் எல்லைக்கோடு வரை வந்தவர்களைக் கொத்துக் கொத்தாகப் பிரித்தானியப் படை கொன்று குவித்தது. இந்திய தேசிய படை தோல்வியைத் தழுவியது. அது மட்டுமல்ல ஜப்பான் இரண்டாம் உலக போரில் சரணடைந்தது. எனவே, போரை நடத்த இயலாத நிலைக்கு ஆளானார்.

ஆகஸ்ட் 23, 1945 அன்று ஜப்பானிய செய்தி நிறுவனம் ஆகஸ்ட் 18, 1945 அன்று தாய்பெயில் வானூர்தி தளத்தில் நடந்த விபத்தில் போஸ் இறந்ததாக அறிவித்தது. ஆனால், தைவான் நாடு அப்படி ஒரு வானூர்தி விபத்து நடக்கவில்லை எனக் கூறி அச்செய்தியை மறுத்தது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின், 1956 ஏப்ரல் மாதம், முன்னாள் பிரதமர் நேரு ஆட்சியின் போது நேதாஜி பற்றிய உண்மைகளைக் கண்டறிய மூவர் கொண்ட ஷாநவாஸ் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. 1970ஆம் ஆண்டு ஜூலை மாதம் முன்னாள் பிரதமர் இந்திரா ஆட்சியின் போது ஓய்வு பெற்ற பஞ்சாப் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜி. டி. கோசலாவைக் கொண்ட ‘ஒரு நபர் விசாரணை ஆணையம்’ அமைக்கப் பட்டது. 1999ஆம் ஆண்டு முன்னாள்

பிரதமர் வாஜ்பாய் ஆட்சியின் போது, 'முகர்ஜி ஆணையம்', என மூன்று ஆணையங்கள் நியமிக்கப்பட்டன. ஆனாலும், நேதாஜி மரணம் குறித்த தெளிவான முடிவினை எந்த ஆணையமும் ஆதாரத்தோடு அறிவிக்கவில்லை.

உத்திரப் பிரதேசத்தில் 1985 வரை வாழ்ந்த இந்துத் துறவி பகவான்ஜி அல்லது 'கும்னமி பாபா' என்பது சுபாஷ் சந்திர போஸ்தான் என்று உறுதிபடக் கூறுகின்றனர். அரசு இக்கருத்தினை ஏற்கவில்லை.

1992இல் சுபாஷ் சந்திரபோஸுக்கு இறப்புக்குப் பின்னான இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. ஆனால், உச்சநீதிமன்ற ஆணையின்படி இவ்விருது திரும்பப் பெறப்பட்டது.

*கே. மாலதி*
*இளங்கலை கணிதம்*
*முதலாண்டு 'ஆ' பிரிவு*

***கருத்து:***

"தடுமாறும்போது
தாங்கிப் பிடிப்பவரும்
தடம் மாறும்போது
தட்டிக்கேட்பவரும்
ஓர் உண்மையான
நண்பர் ஆவார்."

**F R I E N D**

F- First, R – Relation, I – In the, E-Earth
N – Never, D- Dies

**N.** நந்தினி, ***இளங்கலை வேதியியல் முதலாண்டு***

# தமிழர் பொங்கல்

***"பழைமை பேசாதே***
***தமிழா!***
***பழைமை மறக்காதே***
***தமிழா!***
***இவ்உலகில்***
***தன்நிலை உயர***
***தமிழன் என்று***
***வீறு கொண்டு***
***எழுந்து வர***
***விவேகமாய்***
***நிமிர்ந்து வர***
***பொங்குக***
***தமிழர் பொங்கல்"***

டி. செந்தமிழ் செல்வி
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## முப்பொங்கல்

*"உணவளித்த தாய்மண்ணைச்*
*செழிக்க வைப்பது*
*தைப்பொங்கல்.*
*உழைத்த மாடுகளை*
*மகிழ வைப்பது*
*மாட்டுப்பொங்கல்.*
*காணாதவர்களைக் காணுவது*
*காணும் பொங்கல்"*

ஆர். முத்துக்குமரன்
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## பொங்கல் வாழ்த்து

*"வாழ்க்கை வளம்பெற*
*வாழ்த்திப் பாடும்*
*சொற்களெல்லாம்*
*வந்துசேரட்டும்,*
*உங்கள் வாசல்*
*கதவைத் தட்டிடட்டும்!*
*இனிய பொங்கல்*
*நல்வாழ்த்துகள்"*

யு. சக்திவேல்
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## புதிய வாழிடம்

பூமியில் இருந்து 57 கோடி கி.மீட்டர் தூரத்தில் செவ்வாய் கிரகம் உள்ளது. இங்கு 'உயிரினங்கள் வாழமுடியுமா' என்ற ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாசா மையம் ஈடுபட்டுள்ளது.

அதற்காகக் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ரோவர் விண்கலம் செலுத்தப் பட்டது. அது கடந்த ஆகஸ்டு மாதம் தரை இறங்கியது. ரோவருடன் இணைக்கப்பட்ட கியூரியாசிட்டி என்ற ரோபோ ஆய்வு கூடம் செவ்வாய் கிரகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் மண் அமைப்பு உள்ளிட்டவற்றை போட்டோ எடுத்து அனுப்பி வருகிறது.

அங்குள்ள பாறைகள், மண் ஆகியவற்றை வெட்டி எடுத்து போட்டோ அனுப்பி வைத்தது. இந்த நிலையில் செவ்வாய் கிரகத்தில் ஏற்பட்ட புழுதி புயலைப் புகைப்படம் எடுத்து அனுப்பியுள்ளது. இந்தப் புழுதி புயல் அங்குக் கடந்த நவம்பர் மாதம் பத்தாம் நாள் வீசியுள்ளது.

இதன் மூலம் செவ்வாய் கிரகத்தில் சுற்று சூழல் மாறியுள்ளதையும் கியூரியாசிட்டி தெரிவித்துள்ளது. செவ்வாய் கிரகத்தில் புழுதி புயல் வீசிய படத்தை நாசா விஞ்ஞானிகள் வெளியிட்டனர்.

செவ்வாய் கிரகத்துக்கு அடுத்த 20 ஆண்டுகளில் 80 ஆயிரம் பேரை அனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும், இதற்காக கட்டணம் 5,00,000 அமெரிக்க டாலர் என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனர் எலான் மஸ்க் கூறியுள்ளார். மஸ்க் முதன் முதலில் தனியார் விண்வெளி மையம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சுற்றுலா அழைத்து சென்றவர் ஆவார்.

## முயற்சி

***"விழுந்ததை எண்ணி***
***வருந்தாதே!***
***விருட்சமாய் வளரு***
***விதைபோலே!***
***முயற்சி செய்!***
***முடியும் வரையல்ல,***
***மூச்சு உள்ளவரை.***
***முயற்சி ஒன்றே***
***உலகில் முடிவற்றது."***

கே. கோபிகா,
*இளங்கலை கணிதம்*
*முதலாண்டு 'ஆ' பிரிவு*

*இசைநினைவுகள்: 03*

## எம்.கே.டி.

எம்.கே.டி. என்று அனைவராலும் அழைக்கப்பட்ட தியாகராஜன் மாயவரத்தில் (தற்பொழுது மயிலாடுதுறை), விசுவகர்மா பொற்கொல்லர் குடும்பத்தில் 1910 மார்ச் முதல் தேதி கிருஷ்ணமூர்த்தி - மாணிக்கத்தம்மாள் தம்பதியின் மகனாக பிறந்தார்.

அவரின் சிறுவயதிலேயே தந்தை கிருஷ்ணமூர்த்தி, தமது குடும்பத்துடன் திருச்சிக்குச் சென்றுவிட்டார். சிறுவன் தியாகராஜனுக்குப் பள்ளிப்படிப்பில் நாட்டம் செல்லவில்லை. யார் பாடினாலும், இசைக் கச்சேரி எங்கு நடைபெற்றாலும் தியாகராஜன் அங்கே செல்வது மட்டுமல்ல, மறுபடியும் அந்தப் பாடல்களை ஒழுங்காகக் கேட்போர் வியக்கும் வகையில் பாடிக் காட்டுவார்.

எப்.ஜி.நடேச அய்யர் தமது திருச்சி இரசிக இரஞ்சனி சபா நடத்தும் அரிச்சந்திரன் நாடகத்தில் லோகிதாசன் பாத்திரத்தில் தியாகராஜன் அரங்கேற்றம் நடைபெற்றது. அரிச்சந்திரன்

நாடகத்தைப் பார்த்த பிரபல வயலின் வித்துவான் மதுரை பொன்னு ஐயங்கார், தியாகராஜனின் குரல் வளத்தையும், இசை நயத்தையும் கண்டு பாராட்டியதுடன் அவருக்குக் கருநாடக இசையை முறையாகக் கற்றுத்தர முன்வந்தார். கர்நாடக இசையில் பயிற்சி பெற்ற அதேநேரத்தில், நாடகத் துறையில் ஆசானாக விளங்கிய நடராஜ வாத்தியார், நடிப்பில் அவருக்குப் பயிற்சியும் தந்தார்.

ஆறு ஆண்டுகள் பயிற்சி தரப்பட்டதும், தியாகராஜனுடைய பாட்டுக் கச்சேரியின் அரங்கேற்றத்தை நடத்த பொன்னு ஐயங்கார் திட்டமிட்டு, இசைக்கலையில் மிகப் பெரியவர் களாகத் திகழ்ந்தவர்களை அணுகி, தமது மாணவரின் இசைத் திறமையை விளக்கினார். கடைசியாக, தமிழ்நாட்டில் தலைசிறந்த சங்கீத மேதையான புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை, தியாகராஜன் கச்சேரியில் கஞ்சிரா வாசிக்க முன்வந்தார். அவரை யொட்டி, மிருதங்கம், வயலின் ஆகியவற்றில் தலைசிறந்தவர்களும் தியாகராஜனின் அரங்கேற்றத்தில் உடன் வாசிக்க இசைந்தனர். இது அன்றைய இசை உலகில் மிகப்பெரிய நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது.

யாரும் எதிர்பார்க்காத வகையில் அன்றைய தினம் தியாகராஜனின் குரல் வளமும், கர்நாடக இசையின் இனிமையும் நுணுக்கமும், கேட்போர் வியப் படையும் வகையில் நான்கு மணி நேரக் கச்சேரியைச் சிறப்படையச் செய்தன. கச்சேரி முடிவில் புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை எழுந்து, தியாகராஜன் ஒரு 'பாகவதர்' என்று பட்டம் வழங்கினார். அவ்வாறு தியாகராஜ பாகவதர் தமிழிசை உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். நாளடை வில் 'பாகவதர்' என்றால் அவரை மட்டுமே குறிப்பதாக அது மக்களிடம் அமைந்தது.

1926இல் திருச்சி பொன்மலையில் முதன்முதலாகப் பவளக்கொடி நாடகத்தில் அர்ஜுனனாக வேடமேற்று தியாகராஜ பாகவதர் நடித்தார். அதில் பவளக்கொடி வேடமேற்றுப் பெண் வேடத்தில் டி.பி. இராமகிருஷ்ணன் நடித்தார். பின்னர் அவருடன் இணைந்து நாடகத்தில் பவளக்கொடி வேடத்தில் எஸ். டி. சுப்புலட்சுமி நடித்தார். பாகவதர், சுப்புலட்சுமி நாடகமேடை நட்சத்திரங்களாக அறிமுகமாயினர்.

1934இல் அவர்கள் நடித்த பவளக்கொடி நாடகம் திரைப்படமாக லேனா (லெட்சுமணன் செட்டியார்) தயாரிப்பில், பாபநாசம் சிவன் பாடல்களுடன், கே. சுப்பிரமணியம் இயக்கத்தில் வெளிவந்தது. அந்தப் படத்தில் இருந்த 55 பாடல்களில் 22 பாடல்களைப் பாகவதர் பாடியிருந்தார். தமிழ்நாடெங்கும் திரைப்படக் கூடங்களில் மக்கள் வெள்ளம் வரலாறு காணாத அளவுக்கு நிரம்பி பவளக்கொடிக்கு பெரிய வரவேற்பு இருந்தது. ஒன்பது மாதங்கள் தொடர்ந்து அப்படம் ஓடியது. பாகவதர் நடித்த நவீன சாரங்கதாரா (1936), சத்தியசீலன் (1936 - பாகவதர் இரட்டை வேடமேற்று நடித்தது), சிந்தாமணி (1937), அம்பிகாபதி (1937), திருநீலகண்டர் (1939), அசோக்குமார் (1941), சிவகவி (1943), ஹரிதாஸ் (1944) ஆகிய திரைப்படங்கள் வெற்றிப்படங்களாக வெளிவந்தன.

சென்னையில் பரபரப்பாகப் பேசப் பட்ட லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் பாகவதர் மற்றும் அவரின் திரையுலக உற்றத் தோழரான என்.எஸ்.கிருஷ்ணன் உடன் கைது செய்யப்பட்டு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனைப் பெற்றார். தண்டனைக் காலத்திலேயே இவரின் வழக்கு மறு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு 1948 இல் இருவரும் குற்றமற்றவர்கள் என இரண்டு ஆண்டு சிறைக்குப்பின் விடுவிக்கப் பட்டனர். சிறையிலிருந்து வெளி வந்ததும், இராஜமுக்தி (1948), அமரகவி (1952), சியாமளா (1952), புதுவாழ்வு (1957), சிவகாமி (1960) ஆகிய படங்கள் பெரும் வெற்றியைப் பெறவில்லை. ஆனால், அவர் பாடல்கள் அந்தப் படங்களில் எப்போதும்போல் சிறப்பாக அமைந்திருந்தன.

எம்.கே.டி.யின் பாடல்கள் பெரும் பான்மையாக இறைப் பற்றுடனும், தென்னிந்திய பாரம்பரிய இசையைச் சார்ந்தே இருக்கும். இவர் நடிக்கும் திரைப்படங்களுக்கு வழக்கமாகப் பாடலெழுதும் பாடலாசிரியரான பாபநாசம் சிவன், இவருக்கென தனித்துவமான பாடல்களை இயற்றுவதில் வல்லவராவார். இவரின் பல பாடல்கள் எம்.கே.டி யின் புகழை உயர்த்தின, மக்களிடையே பெரும்புகழையும் பெற்றன. ‘மன்மத லீலையை வென்றார் உண்டோ’, ‘தீன கருணாகரனே நடராஜா’, ‘வதனமே சந்திரபிம்பமோ’ போன்ற இவரின் புகழுக்குச் சான்றாக உள்ளன. அவர் பாடல்களில் 4 1/2 கட்டை

(குரல் தடிமன்) சுருதியில் (சுதி) பாடக்கூடியவர். குரலில் பெண்களின் நளினத்தன்மை மிகுந்திருக்கும். பல நேரங்களில் பெண் பாடுவது போல் தோன்றுவதுண்டு. சுருதியின் உச்சநிலையிலியிருந்து உடனே கீழே இறங்கிப்பாடும் வல்லமை பெற்றவர். வார்த்தைகளை உடைத்து உடைத்துப் பாடுவதில் வல்லவர். இறுதியில் வல்லினமெய் தெரியாமல் பாடக்கூடியவர்.



அவரின் கர்நாடக இசைக்குச் சான்றாக, தஞ்சை அருகே நடந்த நிகழ்வைக் கூறுவர். தஞ்சாவூர் அருகே உள்ள மாவூரில் இசைக் கச்சேரி செய்யும் பொழுது இரவு அங்கிருக்கும் அரவை இயந்திர நிறுவனத்தின் வழக்காமான அறிவிப்புச் சங்கொலி முழங்கியது, அப்பொழுதும் பாடுவதை நிறுத்தாமல், அந்தச் சங்கொலிக்கு நிகராகத் தன் குரலை இழுத்து அது முடியும் வரை பாடினார். மக்களின் கவனம் முழுவதும் அவரின் குரலின் மீதுதான் இருந்தது.

அவரின் இசையைச் செல்வந்தர் முதல் பாமரர்கள் வரை அனைவரும் பாகுபாடின்றி விரும்பினர். அனைவருக்கும் புரியும்படி பாடினார். அன்றைய நாட்கள் நாடக மோகம் அதிகமிருந்த காலக்கட்டமானதால், திரைப்படத்திற்கு நாடகக் கலைஞர்களையே தேர்வு செய்தனர். நாடகக் கலைஞர்களுக்கு நடிப்புடன் பாடவும் தெரிந்திருக்கவேண்டும். ஆகையால் பாரம்பரிய இசைக் கலைகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தனர். பாகவதரும் அவ்வாறு தேர்ச்சி பெற்றவராவார். அவரின் இசைப் புலமைக்குப் போட்டி போட்டுக் கொண்டு திரைப்படமெடுக்க பல செல்வந்தர்கள் ‘மதுரை டாக்கிஸ்’ என்ற குழுஅமைத்து படமெடுக்க முன்வந்தனர். மதுரை செல்வந்தரால் மதுரை டாக்கீஸ் நிறுவனத்தால் எடுத்து திரையிடப்பட்ட ‘சிந்தாமணி’ திரைப்படம் பெரும்வெற்றி பெற்றதினால் அத்திரையரங்குச் சிந்தாமணி திரையரங்கம் என்று பெயர் பெற்று இன்றுவரை அவ்வாறே அழைக்கப் படுகின்றது.

அவரின் சிகையலங்காரம் பாகவதர் சிகையலங்காரம் என்று

அனைவராலும் அன்றைய நிலையில் பின்பற்றபட்டு அனைத்து தரப்பினரும் அலங்கரித்து கொண்டனர்.

தமிழ்த்திரையுலகின் முதல் உயர் நட்சத்திரமாகக் கருதப்படும் இவர், மறைவுக்கு முன் வரை 14 படங்களில் நடித்தார். அதில் பல வெற்றி பெற்றப் படங்களாகும். திருநீலகண்டர், அம்பிகாபதி, சிந்தாமணி, முதல் வெற்றியைக் கொடுத்த படங்கள். 1944 இல் வெளியிடப்பட்ட 'அரிதாஸ்' மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பிராட்வே திரையரங்கில் ஓடி சாதனைப் படைத்தது. அவர் நடித்த இறுதித் திரைப்படம் சிவகாமி.

நவம்பர் 1, 1959 இல் ஈரல் நோயினால் பாதிக்கப்பட்டு மரண மடைந்தார். தமிழ்த் திரையிலகில் 'அவரைப்போல வாழ்ந்தவருமில்லை, அவரைப் போல வீழ்ந்தவருமில்லை' என்ற கருத்து இன்றளவும் நிலவுகின்றது.

கருத்தும் தொகுப்பும்:
முனைவர் ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

## தைத்திருநாள்

*"பசியோடு பயிரிட்ட*
*உழவனுக்கு நெல்மணிகளை*
*நெஞ்சம் நிறைய தந்து*
*நெற்றி நிறைய சந்தனத்தை இட்டு*
*நன்றியுடன் கடவுளுக்குக்*
*காணிக்கைசெலுத்தும்*
*ஓர் இனிய நாள்*
*பொங்கல் திருநாள்"*

கே. சந்தோஷ்
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## புதுமையின் ஆண்டு

*"நள்ளிரவில் சிலுசிலுவென*
*பனியின் நடுக்கத்தில்*
*இளைஞர்களின் உற்சாக*
*வெள்ளத்தில் மிதந்து வரும்*
*புதுமை ஆண்டு புத்தாண்டு.*
*இரவில் தோன்றி*
*விடியலில் வரும்*
*புத்தாண்டைப் போல்,*
*புத்தாண்டு வாழ்த்துச் சொல்லும்*
*மக்களின் வாழ்வில்*
*புதுமையைக் கொண்டுவர,*
*வாழ்த்தி வரவேற்கின்றோம்."*

எஸ். பாபு
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## பெண்ணின் பெருமை தரும் தாய்மை

தமிழ்ச் சமூகம் ஆண்களுக் கென்றும் பெண்களுக்கென்றும் சில பண்பாட்டுக் கூறுகளை வரையறுத் துள்ளது. 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' என்பது ஆண்களின் இலக்கணம். 'அச்சமும் நாணும் பெண்பாற்'கென்பது பெண்மையின் இலக்கணம்.

'வினையே ஆடவர்க்கு உயிரே' என்பது சங்க இலக்கியம் சுட்டிய ஆணியப் பண்பாடு. 'மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிரே' என்பது சங்க இலக்கியம் சுட்டிய பெண்ணியப் பண்பாடு.

'பண்பாடு' என்பது சமுதாயத்தை நெறிப்படுத்தும் கூறாகும். இது பொதுமைக் கூறாகும். பண்பாட்டுக் கூறுகள் எல்லோரிடமும் இருக்க வேண்டும் என்பது சமுதாய எதிர் நோக்கு. எனினும், எல்லோரிடமும் இப்பண்பாட்டுக் கூறுகள் இருப்ப தில்லை.

சமுதாயம் எதிர்நோக்கும் பண்பாடுகளைக் கொண்டுள்ள மனிதர்களை இச்சமுதாயம் பெருமைப் படுத்துவதில் தவறுவ தில்லை. பண்பாட்டைத் தவறாது கையாண்டுவரும் தலைவியைக் குறுந்தொகைப் பாடல் தாயாகப் பெருமைப்படுத்தியுள்ளதைக் காண முடிகின்றது.

இனிய இல்லறத்தைக் கற்பனை செய்து இல்வாழ்வில் நுழைந்தவள் தலைவி. கணவனே தன் உயிர் என்று கணவனுக்காகவே வாழ்ந்து வருபவள். இத்தலைவியின் பெண்ணியக் குணங்களை மறந்த தலைவன், அவள் வருந்தும் படியாகத் தவறு செய்கிறான். தலைவன் கொண்ட பரத்தமையால் தலைவியின் மனம் தவிப் படைகின்றது. உள்ளுக்குள் வெந்து, வெந்து துன்பம் அடைகிறாள். அவளின் மென்மையும் வெண்மையும் தலைவனால் நுகரப்படாது வீணே கழிகிறது. பொங்கி வரும் உணர்வுகளை அடக்கி வைக் கிறாள். துன்பத்தின் மிகுதியால் வெடித்துவிடும் வார்த்தைகளுக்கு அணை போட்டுப் பேசுகின்றாள். இத்தலைவியைக் கயமனார் நம்முன் காட்சிப்படுத்துகிறார்.

***"யாயா கியனே மாஅ யோளே***
***மடைமாண் செப்பிற் றமிய வைகிய***
***பெய்யாப் பூவின் மெய்சாயினளே***
***பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்***

*இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்*
*கய மூழ்கு மகளிர் கண்ணின் மானும்*
*தண்ணந் துறைவன் கொடுமை*
*நம்மு னாணிக் கரப்பா டும்மே”*

*(குறுந்தொகை - 09)*

இது, தலைமகனுக்குத் தோழி வாயில் நேர்ந்தது, என்னும் துறையில் அமைகிறது.

இயல்பாகவே, மாமை நிறத்தை உடையவள் தலைவி. இப்பொழுது மூடிபோட்டு மூடப்பட்ட செப்பினுள் அடைத்து வைக்கப்பட்ட பூவைப்போல மெலிந்துவிட்டாள். எனினும் தலைவன் செய்த கொடுமையை வெளியே சொல்லுதற்கு நாணப்பட்டு சொற்களை மறைத்துச் சொல்லுகிறாள். அதனால், அவள் ‘கற்புக் கடம் உடையவளாகிறாள்’ என்று தோழி தலைவனிடம் கூறுகின்றாள்.

### *யாய் ஆகியோ*

பெண்மையின் சிறப்பு தாய்மையில் உள்ளது என்பர். இத்தாய்மை என்பது, திருமணம் நடைபெற்று குழந்தைச் செல்வத்தைப் பெற்றெடுக்கும் சிறப்பாகும். இக்கருத்தைச் சங்க இலக்கியம் மாற்றியுள்ளது. சங்க இலக்கியத்தின் வழி ஒரு பெண் குழந்தைப் பேற்றைப் பெறுவதற்கு முன்பே தாய்மைப் பண்பைப் பெறுவதும் உண்டு என்பதை அறியமுடிகின்றது. இச்சிறப்பு எதனால் கிடைக்கின்றது?

இல்லறத் தலைவியானவள் இல்லறக் கடமைகளைச் செவ்வனே செய்வதுடன் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு தன் கணவனின் கொடுமைகளைப் பிறர் அறியக் கூறாமல் இருக்க வேண்டும்.

இப்பாடலில் குறிக்கப்படும் தலைவி மென்மையானவள். பூப் போன்ற இயல்பினள். அவளுக்குத் தலைவன் செய்த கொடுமைகள் மிகப் பெரியன.

தலைவனால் நுகரப்பட வேண்டிய தலைவியின் மென்மைகள் வெம்பி அழிகின்றன.

பூவின் நறுமணமும் நுகரப்பட வேண்டியது. பூவின் மென்மை தொட்டு நுகரப்பட வேண்டியது. பூவின் தண்மை அனுபவிக்கப்பட வேண்டியது. பூவின் அழகு கண்டு, கண்டு களிக்க வேண்டியது.

இவ்வாறே தலைவியும் தலைவனுக்கு உரியவள். இப்படிப் பட்ட பூவைப் பறித்து எடுத்து மூடிப்போட்டு மூடக் கூடிய செப்பினுள் வைத்து, அதனைக் காற்றுப் புகாதபடி மூடி வைத்தால் எப்படியிருக்கும்? அந்தப் பூவின்

உயிர்த்தன்மை போய்விடுகிறது. அதன் இனிய மணம் செப்புக்குள்ளாகவே அடைபட்டுப் போகிறது. அதன் மென்மை செப்பினுள் உள்ள வெப்பத்தால் வெம்பிப் போகிறது. தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தால் இத்தலைவியும் செப்பினுள் அடைக்கப்பட்ட மலராகத் துன்பம் அடைகிறாள். இதனையே,

***"மடைமாண் செப்பிற் றமிய வைகிய***
***பெய்யாப் பூவின் மெய்சாயினளே"***

என்று கயமனார் கூறுகின்றார்.

இப்படிப்பட்ட நிலையிலும் தலைவியானவள் கற்புக்கடமையைப் பின்பற்றித் தலைவனின் கொடுமையைத் தனக்குள்ளாகவே அடக்கிக் கொள் கிறாள். செப்பில் அடைபட்ட பூப்போல, தலைவியும் தலைவன் செய்த கொடுமையால் அடைபட்டுப் போகிறாள்.

இக்கொடுமையைத் தனக்கு நெருக்கமான, தன்னைப் போலவே தலைவியையும் கருதும் தன்னுடன் சிறுவயது முதலே பழகிவரும் தோழியிடம் கூடக் கூறாமல் தனக்குள்ளாகவே அடக்கிக் கொள்ளும் தன்மையின் சிறப்பால் இத்தலைவி தாயாகிப் போகிறாள்.

'இவள் தாய்மைக் குணம் உடையவள். என்னையும் என்னைப் போன்ற பிறரையும் வழி நடத்திச் செல்லக்கூடியவள். இவள் என் தோழி. இல்லை, இல்லை இவள் என்தாய்' என்பதையே 'யாய் ஆகியளே' என்று கூறுகிறாள் தோழி.

***தண்ணந்துறைவன் கொடுமை***

குளிர்ச்சி பொருந்திய துறையை உடைய ஊரினன் இத்தலைவன். அவன் செய்த கொடுமையோ மிக வெம்மையானது. தலைவன் செய்த கொடுமையை எப்படிப்பட்டது என்பதைச் செப்பில் அடைக்கப்பட்ட பூவின் நிலையுடன் விளக்கிய கயமனார், இத்தலைவனின் கொடுமையை அவனது ஊர்ப் புனைவின் வழியும் சுட்டிச் செல்கிறார்.

பசுமையான இலையின் மீது திரட்சியான காம்பில் நெய்தல் மலர்ந்துள்ளது. இலை நீர்ப்பரப்பின் மேலே இருக்க, அந்த இலையின் மீது, கடினமான தண்டின் மீது மிகவும் அழகாகவே உள்ளது இந்த நெய்தல் மலர். இருந்தபோதும், அந்தக் கழியில் அலைகள் மோதும் தோறும் இந்த மலர் தண்ணிக்குள் மூழ்கி, மூழ்கி எழுகின்றது. இந்த நிலையில் அப்பூவானது தவித்துப் போகிறது.

தண்ணீரில் மூழ்கி, மூழ்கி எழுந்திருக்கும் போது மூச்சுத் திணறல் ஏற்படுவது இயல்பே. அவ்வாறே தலைவியும் பொங்கிவரும் எண்ணங்களால் தன் மென்மையைப் புதைத்துக் கொள்கிறாள். இவ்வாறு பலதுன்பங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் தன்மையால் தலைவி குழந்தை பெறுவதற்கு முன்பே 'தாய்' எனும் சிறப்பிற்கு உரியவள் ஆகிறாள்.

இப்பாடலுள் சொல்லப்பட்டுள்ள செய்திகள், பெண்ணிய வாழ்விற்கு மட்டுமின்றி, ஆண்களின் வாழ்வுக்குமாக அமைந்துள்ளமையை உணரவேண்டும். பெண்ணியப் பண்பின் தனித்தன்மைகள் ஆடவரால் அறியப்படவேண்டும். வெளிக் காட்டிக் கொள்ளாமல் தனக்குள்ளாகவே உறைந்துபோகும் பெண்ணை, அடையாளம் கண்டு அவளின் உணர்வுகளுக்கு மரியாதை வழங்க வேண்டியது ஆண்களின் கடமையாகும். இவ்வாறே ஆணும் பெண்ணும் இணைந்து செல்கையில் அங்கு இனிய சமுதாயம் தோற்றம் பெறும். அமைதியும் ஆனந்தமும் செழித்தோங்கும்.

(சாரலில் மீண்டும் நனைவோம்...)

**முனைவர் த. கண்ணன்**
**தமிழ் விரிவுரையாளர்**

## உலகம் நல்லதா? கெட்டதா?

திடீரென சீடனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. 'இந்த உலகம் நல்லதா? கெட்டதா?' குருவிடம் சென்று விளக்கம் கேட்டான். குரு பதிலுக்கு அவனிடம் ஒரு கேள்வி கேட்டார். "பூனைக்குப் பற்கள் இருக்கின்றன. அவை நல்ல வையா? கொட்டவையா?"

அந்தப் பற்கள் எப்படிப் பயன்படுத்தப் படுகின்றன? எனச் சீடன் சிந்தித்தான். பூனை தன் குட்டியை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு போகும்போது, தன் பற்களால் தான் பத்திரமாகக் கவ்வி எடுத்துச் செல்கிறது. எனவே, குட்டியைப் பொறுத்தவரைப் பற்கள் நல்லவை.

ஆனால், எலியைப் பிடித்ததும் அதே பற்களால்தான் அவ்எலியின் உடலைக் கிழிக்கின்றது. அப்பொழுது எலியைப் பொறுத்த வரை பற்கள் கொடியவை. அப்படியானால் பூனையின் பற்கள் நல்லவை என்று சொல்வதா, கொடியவை என்று சொல்வதா? எனச் சிந்தித்தான். அவனுக்குப் புரிந்தது. பற்கள் எப்படிப் பட்டவை என்பது அவற்றைப் பொறுத்த

தில்லை. அவை யார்மேல் பயன்படுத்தப் படுகின்றன என்பதைப் பொறுத்தது என அறிந்தான். அதனையே தன் பதிலாகக் குருவிடம் கூறினான்.

அதைக்கேட்ட குரு, ''அதே போல்தான் உலகமும். ஒருவருக்கு நல்லதா இருப்பது அடுத்துவருக்குக் கெட்டதாகத்தோன்றும். ஒருவருக்கே ஒரு சமயம் நல்லதாகத் தெரிவது வேறொரு சமயம் கொடியதாகத் தோன்றும். உலகம் நல்லதா, கெட்டதா என்பது உலகத்தைப் பொறுத்ததல்ல – பார்க்கும் நம்மைப் பொறுத்தது.'' என்றார்.

திருமதி. து. சரஸ்வதி
தமிழ் விரிவுரையாளர்

## புத்தாண்டு

*"சிங்கத் தமிழனே*
*தலைத்தோங்கு.*
*சினத்தினை நீ*
*அடக்கி ஆளு.*
*வையகம் வானகமும்*
*வாழ்த்த நீ வாழு.*
*வாழ்த்தி வணங்கிடுவோம்*
*புத்தாண்டை"*

ஆர். கார்த்திகேயன்
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## புத்தாண்டு

*"புத்தாண்டு பிறந்ததின்று*
*புதுமையெல்லாம் பொழிகவென்று*
*இத்தரையில் மாந்தரெல்லாம்*
*இன்பமுடன் வாழ்கவென்று*
*வளமையெங்கும் நிறைகவென்று*
*வறுமையது மறைகவென்று*
*விளைவு எங்கும் பெருகவென்று*
*விடியட்டும் இந்தப் புத்தாண்டு"*

ரா. ஸ்ரீராம்குமார்
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## நட்பு

*"தண்ணீரைப் பார்க்கும்*
*போதெல்லாம்*
*அதில் உன் முகம் தெரிகிறது.*
*எனக்கோ உயிர்போகும்*
*அளவுக்குத் தாகம்.*
*தண்ணீரைக் குடித்துவிட்டால்*
*உன் முகம் களைந்துவிடும்.*
*ஆனால், தோழியே*
*நான் உன் முகத்தைப்*
*பார்த்துக்கொண்டே*
*என் உயிரை விடுவேன்"*

கி. கீர்த்திகா
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

# தை மாதம்

'தைமாதம்' என்பது, சக்தி வாய்ந்தது. இம்மாதத்தினை 'மகரமாதம்' என்றும் அழைப்பார்கள். மகர ராசிக் கட்டத்திற்குள் சூரியன் நுழைவதே மகரமாதம். ஜோதிடத்தில் பூமியை இரண்டாகப் பிரிப்பதுபோல் ஆகாயத்தையும் இரண்டாகப் பிரிப்பர். அதைச் சூரியன் பகுதி, சந்திரன் பகுதி என்றும் கூறுவது உண்டு. அதில மகரத்தில் இருந்து கடகம் வரை சந்திரனுடைய பகுதிக்குள் வரும். அவை சந்திராதிக்கத்திற்குரியன. இந்த மாதத்தில் இருந்து சூரியன்பகுதி தொடங்குகிறது. இந்த மாதத்தில் சூரியப் பகுதி வலிமையடைகிறது. அதாவது உத்திராயணப் புண்ணிய காலம் தொடங்குகிறது. அதாவது காலத்தை இரண்டு அயனமாகப் பிரிக்க வேண்டும். அவை, தக்ஷாயணம் (தெற்கு), உத்திராயணம் (வடக்கு) ஆகும். அதனால்தான் இந்தக் காலம் எல்லா வகையிலும் சிறப்புடையது. உத்திராடம் சிறந்த நட்சத்திரம்.

"உத்திராடத்தில் பிள்ளையும் ஊர் எல்லையில் கொல்லையும் (வயலும்) என்பது பழமொழி. அதாவது, உத்திராடத்தில் பிள்ளை பிறந்தால் உடனடியாக அவர்களுக்கு அருகிலேயே நிலம், வீடு அல்லது விளைநிலம் வாங்கும் நிலை உண்டாகும். எனவே, உத்திரா டத்தின் ராசியான மகரத்தில் சூரியன் நுழைவது வெகு சிறப்பான ஒன்றாகும். அந்த நேரத்தில்தான் பல விண்மீன்கள் சூரியனையும் சந்திரனையும் சூழ்ந்திருக்கும். கேரளாவில் இதனை 'மகரஜோதி' என்று அழைக் கின்றனர். விளக்கை ஏற்றி 'ஜோதி' என்று காண்பிப்பது ஓர் அடையா ளமே. ஆனால், இயற்கை யாக இருப்பதை அறிவிப்பதற் காகவே அவ்வாறு செய்கின்றனர்.

**தைப்பொங்கல்**

மகர மாதத்திற்குள் உத்திரப் புண்ணியக்காலம் துவங்கிக் கூடிய முதல் நாள்தான் தைப்பொங்கல். சூரியனுக்கும் இயக்கம் உண்டு. அது தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும். ஆன்மிகத்தில் சிவனுக்கு இணையாகச் சூரியனை ஒப்பிடுவர். சிவன் தனக்குத் தானே கட்டுப்பாடுகள் வைத்துக்கொள்வார். அவருக்கு மேலே யாரும் இல்லை. அதுபோல்தான் சூரியனும். அது எதனையும் சுற்றவேண்டியதில்லை. மற்ற கோள்கள்தான் சூரியனைச் சுற்றுகின்றன. எனவே, இவ்வளவு சிறப்புபெற்ற தையையே தமிழர் களின் முதல் மாதமாகச் சங்க

காலங்களில் போற்றிக் கொண்டாடினர்.

பொங்கல் உழைக்கும் மக்கள் இயற்கைக்கும் மற்ற உயிர்களுக்கும் சொல்லும் நன்றியாகக் கொண்டாடப் படும் நாளாகும். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக நன்றி தெரிவிக்கும் விதமாகச் சங்ககாலத்தில் சர்க்கரைப் பொங்கல் செய்து அதனைச் சூரியனுக்குப் படைத்து வழிபட்டனர். இதுவே, நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் 'பொங்கல் திருநாள்' கொண்டாட்டமாக மாறியது. மேற்கு நாடுகளில் பொங்கல் போன்றே ஒரு நன்றி தெரிவிக்கும் நாள் உண்டு. இந்தியாவின் வடமாநிலங்களில் இது 'மகரசங்கராந்தி' எனவும் சங்கராந்தி எனவும் கொண்டாடப்படுகின்றது.

**தை அமாவாசை**

தை அமாவாசை, இந்து சமயத்தவர்க்கு மிகவும் சிறப்பான தினமாகும். தை அமாவாசையில் ஆறு, கடல் போன்ற புனித நீர்நிலைகளில் நீராடி மூதாதையர்களுக்கும் படையல் செய்து சிறப்பு பூசை (திதி) செய்வர். திருநெல்வேலி அருள்மிகு நெல்லை யப்பர் கோயிலில் ஆண்டுதோறும் தை அமாவாசை தினத்தன்று லட்சதீபம் ஏற்றப்படுகின்றது.

**தைப்பூசம்**

தை மாதத்தில் பூச நட்சத்திரத்தில் வரும் நாளையே தைப்பூசம் என்று அழைக்கப்படுகின்றது. முருகனுக்கு உகந்தநாள் தைப்பூச தினம் ஆகும்.

***"சந்திரன் என்பது மன அறிவு***
***சூரியன் என்பது ஜீவ அறிவு***
***அக்னி என்பது ஆன்ம அறிவு"***

சந்திரக் சூரியனில் அடங்கி, சூரியன் அக்னியில் அடங்கி, அக்னி ஆகாயத்தில் அடங்கும் என்பதே தைப்பூசத்திருநாள். ஆகவே, 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதுபோல் அனைவருக்கும் தை பிறந்தால் நல்வழியே பிறக்கும். இவையே, தைமாதத்தின் சிறப்புகளாகும்.

**திருமதி. லோ. புனிதவள்ளி**
**தமிழ் விரிவுரையாளர்**

## நட்பு

***"எனக்கும் காற்றுக்கும்***
***ஒரு போட்டி. யார் முதலில்***
***உன் இதயத்தைத் தொடுவது?.***
***காற்றுக்கு விட்டுக்கொடுத்தேன்.***
***உன் சுவாசம்***
***நின்று விடக் கூடாதென்று"***

பா. கோமதி
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## காற்று

“என்னை ஆட்டி வைக்கும்
அழகுப் பதுமையே!.
ஊர் ஊராய்ச் சுற்றிவாழ
உதவும் என் உயிர் நீ!
மனிதனில் நுழைந்த உயிர் நீ!
மரத்துள் புகுந்த இயற்கை நீ!
இயற்கையைப் பார்க்கும் போது
உன்னைப் பார்ப்பது போல்
நினைக்கிறேன். என்னுள் உள்ள
மிதக்கும் உயிர் நீ!”

மு. சதிஸ்
இளங்கலை கணினி அறிவியல்
முதலாண்டு ‘அ’ பிரிவு

## புத்தாண்டு

“அண்டமெங்கும் கொண்டாட்டம்!
இன்று, பூமி
புதியதாய்ச் சுற்றத் தொடங்குதே!
அழகான சிறகு முளைத்து
உலகு பறக்குதே!
எங்கும் மழை
இனிதாய்ப் பொழிய,
மேகக் கூட்டங்கள்
பரவிட வேண்டும்.
ஆறுகள் நிரம்பியெங்கும்
அளவாய்ப் பாய,
பூமித்தாய் சிரிப்பாள்.

குதூகலமாய்
உள்ளங்கள் இனிதாகத்
துடிக்கட்டும்.
தென்றல் வீசிடும்.
அலைகள் எழும்பிடும்.
இயற்கையெல்லாம் நன்றாய்க்
கவி சொல்லிடுமே!
எம் கவலை மெதுவாய்
விலகி அடங்குதே.
அழகிய பூவாய்
அண்டத்திலே பூப்பாயோ?
இவ்வுலகமே ஒரு
கலைப் பண்டமாகட்டும்.
துண்டு துண்டாகிய
உள்ளங்களெல்லாம்
ஒன்றாய்ச் சேரட்டும்.
நிலவு வந்து சிரிக்கட்டும்.
நீரலைகள் பாடட்டும்.
நினைப்பதெல்லாம் நலமாக
இனி, எப்பொழுதும் ஆகட்டும்.
அழுத கண்ணீர் காயும் முன்
இடியாக வந்ததெல்லாம்
கடல் நீரில் கரைந்துபோகும்.
சிறுபனித்துண்டு ஆகட்டுமே.
காண்பதெல்லாம் சுகமாக
ஆயுள் வரை தொடரவேண்டும்.
கனிவாக வாழ்த்துப்பா
நீ இசைக்கின்றாய்.
உண்மையென்ற அச்சுக் கொண்டு
உலகு இனி சுழல வேண்டும்.
நியாயங்கள் பெருகியெங்கும்

*நீதி நிலைத்திட வேண்டும்.*
*உண்மை பேசிடும்*
*உதட்டைப் பெறுங்கள்.*
*நன்மை செய்திடும்*
*கரங்கள் ஆகுங்கள்.*
*இதயம் சிறந்திட*
*சிந்தை செய்யுங்கள்.*
*சாதி, பேதங்கள்*
*இனியும் வேண்டாம்.*
*நீதி கொண்டே எதையும்*
*சாதியுங்கள்.*
*மற்றவற்றை நாளைய*
*சரித்திரங்கள் சொல்லும்"*

பி. சௌந்தர்ராஜ்
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## நினைவுகள்

*"உன் நினைவுகளைக் கண்கள்*
*மறப்பதில்லை ஏனோ?*
*உன்னை நினைப்பதால்*
*கண்ணீர் வருவதில்லை!*
*கண்ணீர் வந்தால் உன்*
*நினைவுகள் என்னைவிட்டுப்*
*பிரிந்துவிடும்! ஆதலால்,*
*கண்ணீர் வருவதைக்*
*கண்கள் அனுமதிப்பதில்லை"*

தி. சிவகாமி
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## மணிமேகலை

கா. நித்யா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

உலக மானிடத்தின் வளர்ச்சிக்கு உதவவேண்டும், மனிதகுலம் குறை இல்லாமல் நல்வாழ்க்கை வாழ வேண்டும் என்கின்ற குறிக்கோள்களுடன் படைக்கப்படுவதே இலக்கியம். இந்த நோக்கத்தை முழுமையாக வைத்து எழுதப்பட்ட காப்பியமே மதுரை, கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேலைக் காப்பியம் ஆகும்.

மணிமேகலைக் காப்பியத்தின் காலம், சிலப்பதிகாரக் காப்பியத்தின் காலமான கி.பி. இரண்டாம் நூற்றாண்டே ஆகும். இக்காப்பியம் சிலப்பதிகாரக் காப்பியத்தின் தொடர்ச்சியாகத் திகழ்வதாலும் புகாரின் ஒரு பகுதியைக் கடல் கொண்டதைப் பாடுவதாலும் இது சிலப்பதிகாரத்திற்குப் பின்னர் தோன்றியக் காப்பியம் என்று பெறப்படுகின்றது. இது பௌத்த சமயக் காப்பியம்.

இக்காப்பியம் விழாவரை காதை முதல் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை வரை

முப்பது காதைகளைப் பெற்று விளங்குகின்றது. ஒவ்வொரு காதையும் கதையைத் தழுவிப் பெயரிடப் பட்டுள்ளது.

பழந்தமிழ் நாட்டில் ஆன்மிகக் கொள்கைகள் வலிமையும் செழுமையும் தெளிவும் பெற்று விளங்கின. அவற்றைப் பற்றிய சிந்தனைகளும் வாதங்களும் விளக்கங்களும் தமிழ் அறிஞர்களிடையே விளங்கிவந்தன. மிக நுட்பமாக இயற்கையையும் அதன் அளவில் ஆற்றலையும் அறிந்து உணர்ந்து, தங்கள் கொள்கைகளையும் உறுதிப்பாடுகளையும் தெளிந்து, அவற்றை நடைமுறையிலும் மேற் கொண்டு சான்றோர்கள் பின்பற்றி வந்தனர்.

தமிழ்ப் புலமை நலத்திற் சிறந்தவரான சாத்தனாரும் புலமையும் துறவுநெறியும் ஒருசேர இணைந்து விளங்கியவரான இளங்கோவடிகளும் உயிருய்திப் பற்றியக் கோட்பாடுகளில் ஆழ்ந்த புலமைச் செறிவும் தெளிவும் கொண்டு விளங்கியவர்கள். இந்த உண்மையை விளக்கும் தத்துவ நூலாகவும் மணிமேகலைக் காப்பியம் ஒளிர்கின்றது.

மனிதகுலம் உருவான காலந்தொட்டு இன்றைய காலம் வரை பசி என்ற நோய்தான் மனிதர்களைச் சீரழித்து, துன்பம் செய்து வாழவிடாமல் சாகடித்து வருகின்றது. சோமாலியா நாட்டில் இன்றும் கூட பல இலட்ச மக்கள் பசியால் வாடி வருகின்றனர். பசி மனித குலத்தை மூழ்கடித்து வருகின்றது.

பசிப்பிணியை முற்றிலுமாக இவ்வுலகத்திலிருந்து அகற்ற வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில தோன்றிய காப்பியம் மணிமேகலை.

**“மண்டிணி ஞாலத்து மக்கட் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!”**

என்பதே சாத்தனாரின் உயரிய கோட்பாடு.

மணிமேகலை அழகு மிளிரும் இளம்பெண். கணிகையர் குலத்தில் பிறந்தவள். அவளைக் காப்பியத் தலைவி ஆக்கிப் பெருமை செய்து தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பெரும் புரட்சி செய்தவர் சாத்தனார். பசியால் வாடும் மக்கள் இருக்கும் ஊர்கள் யாவும் சென்று அமுதசுரபியால் உயிர்களின் பசிப்பிணியைத் தீர்க்கும் பெரும் தொண்டு செய்யும் அறச்செல்வியாக மணிமேகலைத் திகழ்கிறாள். இந்தக் காப்பியத்தின் எல்லாக் காதை களிலும் மாதர்குல மேன்மை,

மானுடநேயம், சாதிஒழிப்பு, ஒற்றுமையுணர்வு ஆகிய உயரிய சிந்தனைகள் புகுத்தப்பட்டுள்ளன. மக்களுக்கு இன்றியமையாத தேவைகள் உணவு, உடை, உறையுள். அவற்றை அளிப்பதே நல்லறம் என்பதை இக்காப்பியம் வலியுறுத் தியுள்ளது.

கடற் புயலால் கப்பல் உடைந்து தத்தளித்த சாதுவன் நாக நாட்டில் கரை ஒதுங்குகிறான். அங்கு வாழும் மக்களின் முதன்மை உணவுகள் மனித மாமிசமும் மதுவும் ஆகும். அந்த அரசனிடம் இழுத்துச் செல்லப்படும் சாதுவன் அவர்களின் மொழி அறிந்ததால் மது, மாமிசம் ஆகியவற்றின் தீமைகளைப் பற்றி எடுத்துக் கூறி அவர்களது இயல்பை மாற்றி நல்லவர்களாக்குகின்றான்.

ஆபுத்திரன் என்ற கதைமாந்தர் சாதி, பேதங்களைச் சாடி, சமுதாய மாற்றத்திற்கு வழிவகுக்கின்றார். வேள்வியில் உயிர்களைப் பலியிடு வதனைத் தடைசெய்கின்றான்.

கோவலன், மாதவி தம்பதியருக்குப் பிறந்த மணிமேகலை நாட்டியக் கலை அறிந்தவளாயிருந்தும் இல்வாழ்க்கை இன்பத்தில் பற்றுக் கொள்ளாமல் புத்தப் பிக்குணியாக மாறுகின்றாள். தன் தாயாக அவள் கண்ணகி யையே ஏற்கின்றாள். புகழ், பொருள், அழகு முதலானவற்றின் நிலையாமையை எடுத்துரைக் கின்றாள்.

சாத்தனார் வேண்டியதற்கு ஏற்ப இளங்கோவடிகள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை இயற்றினார். இளங்கோவடிகள் வேண்டியதற்கு ஏற்பச் சாத்தனார் மணிமேகலையை இயற்றினார். இரண்டுமே முத்தமிழின் மூலக்காப்பியங்களாகத் திகழ் கின்றன.

## நட்பு

***“உன் கண்களாலே***
***என்னை அன்புஜோதியில்***
***இணைத்தாய்!***
***புன்னகையாலே***
***கற்பூரமாய் என்னைக்***
***கரைத்தாய்!***
***பூமியின் எல்லை தாண்டி***
***புத்துலகை எனக்குக்***
***காண்பித்தாய்!***
***ஒற்றைச் செடியாய்த்***
***தனித்தவனுக்குப் பூங்காவனம்***
***தந்தாய்!***
***இருட்டுக்குள் இருந்தவனுள்***

*மின்சாரமாய் வெளிச்சம் விதைத்தாய்!*
*வறண்ட நாவில் துளியாய் விழுந்து*
*தாகம் தனித்தாய்!*
*மூங்கிலாய் முடங்கியவனைப்*
*புல்லாங் குழலாய் இசைத்தாய்!*
*களிமண்ணாய்க் கிடந்தவனைப்*
*பாண்டமாய்ப் பிசைந்தாய்!*
*கருங்கல்லாய்க் கரடு முரடானவனைச்*
*சிற்பமாய்ச் சீர்படுத்தினாய்! நீ யார்?*
*என் நண்பன் அல்லவா! "*

ஜி. தாரணி
*இளங்கலை கணினிப் பயன்பாட்டியல்*
*முதலாண்டு 'உ' பிரிவு*

கருத்துகள்: 1,2,3.

*"பலமுறை ஜெயித்தவர் ஒருமுறை*
*தோற்றால் அது விசித்திரம்!*
*பலமுறை தோற்றவர் ஒருமுறை*
*ஜெயித்தால் அது சரித்திரம்"*

கி. பிரீத்தி
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

*"வாழ்க்கை ஒரு வானவில்*
*பல வண்ணம் - சில நேரம்"*

வே. பிரியதர்ஷினி
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

*"உன் கண்கள் அழும்போது*
*கண்ணீரைத் துடைக்க வருபவர்*
*நீ நேசித்தவராக இருக்கமாட்டார்*
*உன்னை நேசித்தவராக இருப்பார்"*

சே. சிவரஞ்சனி
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## நேசம்

*"சிலருக்கு ரோஜா பிடிக்கும்*
*சிலருக்கு மல்லிகை பிடிக்கும்*
*நேசித்துப் பார்*
*காதிதப் பூகூடப் பிடிக்கும்.*
*சிலருக்கு உன்னைப் பிடிக்கும்.*
*உனக்குச் சிலரைப் பிடிக்கும்.*
*நேசித்துப்பார்*
*உன்னை உனக்கே பிடிக்கும்"*

உ. இம்ரான் ஜீஹைர்
*இளங்கலை கணினி அறிவியல்*
*முதலாண்டு 'அ' பிரிவு*

## வருடப்பிறப்பு

*"வாழ்வைப் புதுமையுள்ளதாய்*
*மாற்றும் புத்தாண்டுத் திருநாளே!*
*நீயோ ஒரு கைக்குழந்தையாய்*
*ஒவ்வொரு வருடமும்*
*இவ்உலகில் பிறக்கிறாய்.*
*இத்தருணங்களில் உலகமானது*
*தாயாக மாறுகிறது.*
*அத்தாயின் பிள்ளைகளாக*
*வாழ்கிறோம். நீ ஒவ்வொரு*
*வருடமும் பிறக்கையில்*
*புதுமைகளைத் தருகிறாய்.*
*'இவ்வாறுதான் வாழ வேண்டும்'*
*என்று வழிநடத்தும்*
*தாயாகவும் உள்ளாய்.*

***உன்னை வரவேற்க இவ்உலகம்***
***தவமாய்க் காத்திருக்கிறது.***
***ஒவ்வொரு வருடமும் பிறக்கையில்***
***அனைவர் வாழ்விலும் புதுயுகத்தை***
***ஏற்படுத்துகிறாய்.***
***இவ் யுகத்தில் தாயாக நீ!***
***பிள்ளைகளாக நாங்கள்!***
***உன் தலைமையில்***
***புதுயுகத்தைப் படைப்போம்.”***

சி. மஞ்சுபார்கவி
***இளங்கலை கணினி அறிவியல்***
***முதலாண்டு ‘அ’ பிரிவு***

அறிவிப்பு:

# பயிலரங்கம்

## *‘தொல்காப்பியம் கற்பித்தல் உத்திகள்’*

சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி நல்கையுடன் கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை நடத்தும் பத்துநாள் பயிலரங்கம், ***‘தொல்காப்பியம் கற்பித்தல் உத்திகள்’*** என்ற பொருண்மையில் 21.01.2013 முதல் 30.01.2013 வரை நிகழ உள்ளது. பின்வரும் வல்லுநர்கள் இதில் பங்கேற்றுப் பயிற்றுவிக்க உள்ளனர்.

*முனைவர் செ.வை. சண்முகம் அவர்கள், சிதம்பரம்.*
*முனைவர் பெ. மாதையன் அவர்கள், விருத்தாசலம்.*
*முனைவர் டி. மூர்த்தி அவர்கள், உத்திரப்பிரதேசம்*
*முனைவர் தமிழவன் அவர்கள், பெங்களூரு.*
*முனைவர் டி. விஷ்ணுகுமரன் அவர்கள், ஆந்திரப்பிரதேசம்.*
*முனைவர் ச. திருஞானசம்பந்தம் அவர்கள், திருவையாறு.*
*முனைவர் இரா. சீனிவாசன் அவர்கள், சென்னை.*
*முனைவர் அ. சீனிவாசன் அவர்கள், மதுரை.*
*முனைவர் இ. சூசை அவர்கள், திருச்சி.*
*முனைவர் நா. முத்துமோகன் அவர்கள், மதுரை.*
*முனைவர் ந. தெய்வசுந்தரம் அவர்கள், சென்னை.*
*முனைவர் சு. இராசாராம் அவர்கள், காரைக்குடி.*
*முனைவர் இரா. சம்பத் அவர்கள், புதுச்சேரி.*
*முனைவர் க. பஞ்சாங்கம் அவர்கள், புதுச்சேரி.*
*முனைவர் பி. பழனிவேல் அவர்கள், கிருஷ்ணகிரி.*
*முனைவர் எம். கிருபாகரன் அவர்கள், கோவை.*
*முனைவர் ப. மதிவாணன் அவர்கள், திருச்சி.*

*முனைவர் து. சேதுபாண்டியன் அவர்கள், மதுரை.*
*முனைவர் அ. காமாட்சி அவர்கள், சிதம்பரம்.*
*முனைவர் வீ. பாலமுருகன் அவர்கள், சென்னை.*

பயிலரங்கின் தொடக்கவிழாவில் சிறப்புவிருந்தினர்களாகச் ***சென்னை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு அவர்களும் எழுத்தாளர் உயர்திரு. நாஞ்சில் நாடன் அவர்களும்*** வருகை தந்து சிறப்புரையாற்ற உள்ளனர்.

பயிலரங்கின் நிறைவுவிழாவில் சிறப்புவிருந்தினராகத் ***தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மாண்பமை முனைவர் ம. திருமலை*** அவர்கள் வருகைதந்து சிறப்புரையாற்ற வுள்ளார்.

இப்பயிலரங்கில் கல்லூரிப் பேராசிரியர்களும் இலக்கணத்தில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வாளர்களும் பங்கேற்கலாம்.

**தொடர்புக்கு:**

**முனைவர் மா. கார்த்திகேயன்,**
**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர், 9894953535.**

# அதிவேகம்

சீனாவின் தென் பகுதியில் உள்ள குவாங்ஸு நகர் வர்த்தக நகராக விளங்குகிறது. தலைநகர் பீஜிங்கில் இருந்து இந்நகருக்கு ஏராளமானோர் வந்து செல்கின்றனர். ஆனால், பீஜிங்கில் இருந்து 2,298 கி.மீ. தூரத்தில் உள்ள குவாங் ஸுக்கு 20 மணி நேரம் ரயிலில் பயணம் செய்ய வேண்டி இருந்தது. பயண நேரத்தைக் குறைக்கவும், ரயில்வேயை மேம்படுத்தவும் சீனஅரசு அதிவேக ரயில் சேவையைத் தொடங்கியுள்ளது. இந்த ரயில் 2,298 கி.மீ தூரத்தை 300 கி.மீ. வேகத்தில் 8 மணி நேரத்தில் சென்றடையும். வழியில் 35 முக்கிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என்பது குறிப்பிடத் தக்கது.



# நிழல்

*“ஆசை ஆசையாய்*
*என்னை நட்டு வைத்தாய்*
*சின்னஞ்சிறு செடியாய்.*
*உன் பாசத்தால் நான்*
*வளர்ந்தேன் மரமாக.*
*கோடையில் என் நிழல்*
*உனக்குச் சோர்வை நீக்கித்*
*தாலாட்டித் தூங்க வைத்தது.*
*நான் உனக்குத் தாயானேன்.*
*உன் தேவைக்காக நீ*
*என்னை வெட்டியபோது நான்*
*கலங்கினேன் - உனக்காகவே!*
*இனி, உனக்கு நிழல் தர*
*என்னால் இயலாது*
*என்பதற்காக!”*

கே. உமாமகேஸ்வரி
*இளங்கலை கணிதம்*
*முதலாண்டு ‘ஆ’ பிரிவு*

# Cyanide

**M. Sugeetha,**
**B.Sc. Chemistry II Year.**

**poisoning**

Cyanide poisoning is a form of histotoxic hypoxia because the cells of an organism are unable to use oxygen, primarily through the inhibition of cytochrome c oxidase. If cyanide is inhaled it causes a coma with seizures, apnea, and cardiac arrest, with death following in a matter of minutes. At lower doses, loss of consciousness may be preceded by general weakness, giddiness, headaches, vertigo, confusion, and perceived difficulty in breathing. At the first stages of unconsciousness, breathing is often sufficient or even rapid, although the state of the victim progresses towards a deep coma, sometimes accompanied by pulmonary edema, and finally cardiac arrest. Skin color goes pink from cyanide-hemoglobin complexes. A fatal dose for humans can be as low as 1.5 mg/kg body weight.

Blood cyanide concentrations may be measured as a means of confirming the diagnosis in hospitalized patients or to assist in the forensic investigation of a criminal poisoning. Cyanide toxicity can occur following the ingestion of large doses of amygdalin. he cyanide ion halts cellular respiration by inhibiting an enzyme in the mitochondria called cytochrome c oxidase.

## Occurrence and reactions

Cyanides are produced by certain bacteria, fungi, and algae and are found in a number of plants. Cyanides are found, although in small amounts, in certain seeds and fruit stones, e.g., those of apple, mango, peach, and bitter almonds. In plants, cyanides are usually bound to sugar molecules in the form of cyanogenic glycosides and defend the plant against herbivores. Cassava roots (also called manioc), an important potato-like food grown in tropical countries (and the base from which tapioca is made), also contain cyanogenic glycosides.

## Toxicity

Many cyanides are highly toxic. The cyanide anion is an inhibitor of the enzyme cytochrome c oxidase (also known as $aa_3$) in the fourth complex of the electron transport chain (found in the membrane of the mitochondria of eukaryotic cells). It attaches to the iron within this protein. The binding of cyanide to this cytochrome prevents transport of electrons from cytochrome c oxidase to oxygen. As a result, the electron transport chain is disrupted, meaning that the cell can no longer aerobically produce ATP for energy. Tissues that depend highly on aerobic respiration, such as the central nervous system and the heart, are particularly affected. This is an example of histotoxic hypoxia.

The most hazardous compound is hydrogen cyanide, which is a gas at ambient temperatures and pressure and can therefore be inhaled. For this reason, an air respirator supplied by an external oxygen source must be worn when working with hydrogen cyanide. Hydrogen cyanide is produced when a solution containing a labile cyanide is made acidic, because HCN is a weak acid. Alkaline solutions are safer to use because they do not evolve hydrogen cyanide gas.

Oral ingestion of a small quantity of solid cyanide or a cyanide solution as little as 200 mg, or to airborne cyanide of 270 ppm is sufficient to cause death within minutes.

## Human poisoning

Deliberate cyanide poisoning of humans has occurred many times

throughout history. For notable cyanide deaths, see Cyanide poisoning: Historical cases.

Most significantly, hydrogen cyanide released from pellets of Zyklon-B was used extensively in the systematic mass murders of the Holocaust, especially in extermination camps. Poisoning by hydrogen cyanide gas within a gas chamber (as a salt of hydrocyanic acid is dropped into a strong acid, usually sulfuric acid) is one method of executing a condemned prisoner as the condemned prisoner eventually breathes the lethal fumes.

**Industrial organic chemistry**

Some nitriles are produced on a large scale, e.g., adiponitrile is a precursor to nylon. Such compounds are often generated by combining hydrogen cyanide and alkenes, i.e., hydrocyanation: $RCH{=}CH_2 + HCN \rightarrow RCH(CN)CH_3$. Metal catalysts are required for such reactions.

**Medical uses**

The cyanide compound sodium nitroprusside is used mainly in clinical chemistry to measure urine ketone bodies mainly as a follow-up to diabetic patients. On occasion, it is used in emergency medical situations to produce a rapid decrease in blood pressure in humans; it is also used as a vasodilator in vascular research. The cobalt in artificial vitamin $B_{12}$ contains a cyanide ligand as an artifact of the purification process; this must be removed by the body before the vitamin molecule can be activated for biochemical use. During World War I, a copper cyanide compound was briefly used by Japanese physicians for the treatment of tuberculosis and leprosy.

**Food additive**

Due to the high stability of their complexation with iron, ferrocyanides (Sodium ferrocyanide E535, Potassium ferrocyanide E536, and Calcium ferrocyanide E538) do not decompose to lethal levels in the human body and are used in the food industry as, e.g., an anticaking agent in table salt.

*Reference:*

1."Environmental and Health Effects of Cyanide". International Cyanide Management Institute. 2006.
2.www.cyanidecode.org/cyanide_environmental.
3. en.wikipedia.org

கருத்து:

***"எத்தனை எத்தனை ஆசை!***
***இந்தப் பூமியில் பிறக்கும்போது.***
***எத்தனையோ கவலை***
***இந்தப் பூமியில் இறக்கும்போது."***

பா. ஹேமலதா
*இளங்கலை கணிதம்*
*முதலாண்டு 'ஆ' பிரிவு*

## விடியலுக்கு வந்த மடல்மாலைகள்

*வணக்கம்!*

*விடியலைப் படித்தேன். மகிழ்ந்தேன்! 'மழைநீர் சேகரிப்பின் பயனை விளக்கி எழுதியுள்ள கட்டுரை அருமை.*

*மாதங்களை வைத்து இனிய அழகிய கவிதை, 'மாதங்களில் ஒரு கல்யாணமாக' வந்துள்ளது. இப்படியும் கவிதை நன்றாக எழுதலாம் என்பதை மாணவர்கள் சாதித்துக் காட்டியுள்ளனர்.*

*அதற்கு வழிகாட்டியாக / கொண்டு செல்லும் சாதனமாகத் திகழும் விடியலுக்குப் பாராட்டுகள்! கல்லூரியில் 'கல்வி' எனும் கனியைப் பெறுவோம் என்ற கவிதையை (கல்லூரிக்கனி) ஒவ்வொரு மாணவனும் படித்தால் நிச்சயமாகக் கல்லூரிக் கனியுடன் உரிய வேலையும் கிடைக்கப்பெற்றுச் சிறப்பாகத் திகழ்வர் என்பது உறுதி.*

*மாணவர்களின் கலை வண்ணத்தை நடுப்பக்கங்கள் அலங்கரித்துள்ளன. 'கொங்குதேர் வாழ்க்கை' எனும் இலக்கியக் கட்டுரை குறுந்தொகைப் பாடல் ஒன்றைத் தெளிவாகத் திறனாய்ந்து சங்கப் பாவைச் சுவைக்கச் செய்கிறது.*

*தொடரட்டும் மாணவர்களின் அறிவுப்பயணம்! வளரட்டும் விடியலின் பணி!*

நாள்:17.12.2012 அன்பன்,

***முனைவர் ச. ஈஸ்வரன்,***
*தமிழ் இணைப்பேராசிரியர்,*
*தேசியக் கல்லூரி, திருச்சி – 1.*

*இளைஞர்களின் இலட்சியத் துணிவு விடியலின் சின்னம். இளைஞர்கள் தன்னை அறிவதற்கு விடியல் ஒரு தூண்டுகோல். விடியல் புத்தகம் மாணாக்கர்களின் உள்ளத்து அரும்புகளைப் பறை சாற்றுகின்றது.*

நாள்: 26.12.2012

***திரு. எம். முத்துக்கிருஷ்ணன்,***
*விரிவுரையாளர், ஆங்கிலத்துறை,*
*கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு.*

☺